# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# வெற்றிடங்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயலாளர் அலுவலகத்தில் உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று (03) பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

1. மேலதிக செயலாளர் பதவி
2. கணக்காளர் பதவி
3. உள்ளக் கணக்காய்வாளர் பதவி

## 1. மேலதிக செயலாளர் பதவி

**தகைமைகள்**:

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் /உயர்கல்வி நிறுவனத்தில் இருந்து முதல் அல்லது இரண்டாம் வகுப்பு பட்டத்தை பெற்றிருக்க வேண்டியதுடன், நிர்வாகம் அல்லது முகாமைத்துவத் துறையுடன் தொடர்புடைய முனைவர் பட்டப்படிப்பு மட்டத்திலான பட்டப்பின் பட்டத்தையும் பெற்றிருக்க வேண்டும். மேலும், முதல் பட்டம் பெற்ற பின் குறைந்தபட்சம் பத்து (10) ஆண்டுகள் நிர்வாக அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.

**அல்லது**

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனம் வழங்கிய முதல் அல்லது இரண்டாம் வகுப்பு பட்டத்துடன், நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான முதுகலைமாணி/விஞ்ஞானமுதுமாணி மட்டத்தில் குறைந்தபட்சம் இரண்டு (02) ஆண்டுகள் காலவரையறையுள்ள பட்டப்பின் பட்டப்படிப்பு பட்டம் பெற்றிருக்க

வேண்டும். மேலும், முதல் பட்டம் பெற்ற பின் குறைந்தது பன்னிரண்டு (12) ஆண்டுகள் நிர்வாக அனுபவம் இருக்க வேண்டும்.

**அல்லது**

(இ*)* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனம் வழங்கிய பட்டம் நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான முதுகலைமாணி/விஞ்ஞானமுதுமாணி மட்டத்தில் குறைந்தது ஒரு (01) ஆண்டுக்கான பட்டப்பின் பட்டத்துடன் ஆணைக்குழு/உயர்கல்வி நிறுவனம்/நிறுவனமொன்றின் பிரதி செயலாளர் / பிரதி பதிவாளர் பதவி வகித்திருத்தல் மற்றும் அக்குறித்த பதவியில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலத்தை நிறைவு செய்து, அதேபோல், முதல் பட்டம் பெற்ற பின் குறைந்தது பதினான்கு (14) ஆண்டுகள் நிர்வாக அனுபவம் கொண்டிருக்க வேண்டியதுடன், குறைந்தது அதில் ஐந்து (05) ஆண்டுகள் ஆணைக்குழு/உயர்கல்வி நிறுவனம்/நிறுவனமொன்றில் U-EX 2(1) தரத்தின் பிரதி செயலாளர்/பிரதி பதிவாளர் மற்றும்/அல்லது சிரேஷ்ட உதவி செயலாளர்/சிரேஷ்ட உதவி பதிவாளர் மட்டத்தில் U-EX2(1) juj;jpy; பணியாற்றியிருக்க வேண்டும்.

**அல்லது**

(*உ)* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனம் வழங்கிய பட்டம் kw;Wk; நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான குறைந்தது ஒரு (01) ஆண்டுக்கான பட்டப்பின் பட்ட டிப்ளோமாவுடன் ஆணைக்குழு/உயர்கல்வி நிறுவனம்/நிறுவனமொன்றின் பிரதி செயலாளர் / பிரதி பதிவாளர் பதவி வகித்திருத்தல் மற்றும் அக்குறித்த பதவியில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலத்தை நிறைவு செய்து, அதேபோல், முதல் பட்டம் பெற்ற பின் குறைந்தது பதினைந்து (15) ஆண்டுகள் நிர்வாக அனுபவம் கொண்டிருப்பதுடன், குறைந்தது அதில் ஐந்து (05) ஆண்டுகள் ஆணைக்குழு/உயர்கல்வி நிறுவனம்/நிறுவனமொன்றில் U-EX 2(1) juj;jpy; பிரதி செயலாளர்/பிரதி பதிவாளர் மற்றும்/அல்லது சிரேஷ்ட உதவி செயலாளர்/சிரேஷ்ட உதவி பதிவாளர் மட்டத்தில் பணியாற்றியிருக்க வேண்டும்.

**அல்லது**

(*ஊ* )ஆணைக்குழு/உயர்கல்வி நிறுவனம்/நிறுவனமொன்றின் பிரதி செயலாளர் / பிரதி பதிவாளர் பதவியில் மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ள, *அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனத்தில் பட்டம் பெற்ற சட்டத்தரணியாக இருக்க வேண்டியதுடன்,முதல் பட்டம் பெற்ற பின்னர் பதினைந்து (*15) *ஆண்டுகள் நிர்வாக அனுபவம் பெற்றிருக்க வேண்டும், அதில் குறைந்தபட்சம் ஐந்து (*05) *ஆண்டுகள்* ஆணைக்குழு/உயர்கல்வி நிறுவனம்/நிறுவனமொன்றில் U-EX 2(1) juj;jpy; பிரதி செயலாளர்/பிரதி பதிவாளர் மற்றும்/அல்லது சிரேஷ்ட உதவி செயலாளர்/சிரேஷ்ட உதவி பதிவாளர் மட்டத்தில் பணியாற்றியிருக்க வேண்டும்.

**அல்லது**

(எ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனத்தில் இருந்து பட்டம் பெற்றவராக இருந்து, ஆணைக்குழு/உயர்கல்வி நிறுவனம்/நிறுவனத்தில் பதினெட்டு (18) ஆண்டுகள் நிர்வாக அனுபவம் கொண்டவராக இருக்க வேண்டும். இதில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பிரதி செயலாளர்/பிரதி பதிவாளர் பதவியில் நிரந்தரமாக பணியாற்றி, ஆணைக்குழு/உயர்கல்வி நிறுவனம்/நிறுவனத்தில் பிரதி செயலாளர்/பிரதி பதிவாளர் பதவியை வகித்த அனுபவமும் கொண்டிருப்பதும் அவசியம்.

**குறிப்பு:**

"நிர்வாக அனுபவம்" என்பது, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனத்தில் முதல் பட்டம் பெற்ற பின்னர், இலங்கை நிர்வாக சேவையில் உள்ள பதவியில் அல்லது அரச அல்லது தனியார் துறையில் உள்ள அமைப்பொன்றில் மனிதவள முகாமைத்துவம் அல்லது பொது நிர்வாகம் அல்லது பொது முகாமைத்துவம் தொடர்பான ஒத்த பதவியில் பெற்ற அனுபவத்தைக் குறிக்கிறது. நிதி/ பொறியியல் விஞ்ஞானம் அல்லது பிற தொழில்நுட்பத் துறைகள் போன்ற சிறப்பு துறைகளில் பெற்ற அனுபவம் இந்த நோக்கத்திற்காகக் கருதப்படமாட்டாது"

**சம்பள அளவுத்திட்டம்:**

U–EX 3 (I) – மாத சம்பளம் ரூ. 181,730 – 3x3,900; 11x4,850 – 246,780

(இதற்கு மேyhக, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.)

**தேர்ந்தெடுக்கும் அளவுகோல்கள்:**

**அ)** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்.

“ஆ) நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெறும் விண்ணப்பதாரர்கள், தேர்வு செய்யப்படுவதற்காக கவனத்தில் கொள்ளத் தகுதியுடையவர்கள் ஆவர்.”

2. **<u>கணக்காளர் பதவி</u>**

**தகைமைகள்:**

1. (அ.) இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CASL) அங்கத்துவம் அல்லது அதற்கு இணையான தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

**மற்றும்**

(ஆ) மேலே உள்ள 1(அ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்ற பின்னர், கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு தொடர்பாக குறைந்தது ஆறு (06) ஆண்டுகள் நிறைவேற்று மட்டத்திலான அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**அல்லது**

2. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் / நிறுவனத்தில் பிரதி கணக்காளர் / பிரதி நிதியாளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்.

- அக்குறித்த பதவியில் மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலத்துடன் நிரந்தரம் செய்யப்பட்டிருக்க வேண்டும்; மேலும், அந்த சேவைக்காலத்தில் குறைந்தது ஒரு (01) ஆண்டு, மேலே 1(அ) இல் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பெற்ற பின்னர் ஏற்பட்டதாக இருக்க வேண்டும்.

**அல்லது**

3. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் / நிறுவனத்தில் சிரேஷ்ட உதவி கணக்காளர், சிரேஷ்ட உதவி நிதியாளர் / அல்லது சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பதவி வகிப்பவராக இருத்தல்

- கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு தொடர்பான பத்து (10) ஆண்டுகள் நிறைவேற்றுநர் மட்டத்திலான அனுபவத்துடன், அந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- மேற்குறிப்பட்ட பத்து (10) ஆண்டுகளில், குறைந்தது எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலம், பல்கலைக்கழக அமைப்பில் சிரேஷ்ட உதவி கணக்காளர் / சிரேஷ்ட உதவி நிதியாளர் / சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பதவி வகித்தல்.
- மேற்குறிப்பிட்ட எட்டு (08) ஆண்டுகளின் அனுபவத்தில், குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் மேலே 1(அ) இல் குறிப்பிடப்பட்ட தகுதியைப் பெற்ற பின்னர் கிடைத்ததாக இருக்க வேண்டும்.

**அல்லது**

4. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் / நிறுவனத்தில் பிரதி கணக்காளர் / பிரதி நிதியாளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்.

- அந்தப் பதவியில் நிரந்தரம் செய்யப்பட்டிருத்தல்;
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (CASL) வழங்கும் இடைநிலை தகுதி அல்லது அதற்கு இணையான தகுதி பெற்றிருத்தல்;
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து கணக்கியல் /நிதி /முகாமைத்துவம்*தொடர்பில் பட்டப்பின் பட்டம் பெற்றிருத்தல்.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (CASL) வழங்கும் இடைநிலைத் தகுதி அல்லது அதனுடன் இணையான தகுதியை வெற்றிகரமாக முடித்ததைத் தொடர்ந்து, கணக்கியல் மற்றும் /அல்லது கணக்காய்வு தொடர்பாக பன்னிரண்டு (12) ஆண்டுகள் நிறைவேற்றுநர் மட்டத்தில் அனுபவம் பெற்றிருத்தல்.
- மேலே குறிப்பிடப்பட்ட அனுபவத்தில் பத்து (10) ஆண்டுகள் பல்கலைக்கழக அமைப்பில் சிரேஷ்ட உதவி கணக்காளர் / சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் அல்லது சிரேஷ்ட உதவி நிதியாளர் பதவியில் பணியாற்றியிருக்க வேண்டும்.

**அல்லது**

5. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் / உயர் கல்வி நிறுவனத்தில் / நிறுவனத்தில் பிரதி கணக்காளர்/ பிரதி உள்ளக கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதியாளர் பதவி வகிப்பவராக இருத்தல்..

- அந்த பதவியில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டு, அதில் மூன்று (03) ஆண்டுகளுக்கான திருப்திகரமான சேவைக்காலத்தை பெற்றிருத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து முதல் பட்டத்தை பெற்றிருத்தல்;
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (CASL) வழங்கும் இடைநிலைத் தகுதி அல்லது அதற்கு சமமான தகுதி பெற்றிருத்தல்

அல்லது

- இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் (SLIATE) அல்லது அதன் முன்னோடி நிறுவனம் வழங்கும் கணக்கியல் தொடர்பான உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDA) பெற்றிருத்தல்.

- மேலே குறிப்பிடப்பட்ட இடைநிலை தகுதி / கணக்கியல் தொடர்பாக உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDA) பெற்றுக் கொண்டதன் பின்னர், கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு பற்றிய நிறைவேற்றுநர் மட்டத்திலான பதினான்கு (14) ஆண்டுகள் அனுபவம்;

- மேற்கூறிய அனுபவத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள், U-EX 2(I) சம்பளக் குறியீட்டிற்குட்பட்ட சம்பள அளவுத்திட்டம் கொண்ட பல்கலைக்கழக முறைமையில் பிரதி கணக்காளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதியாளர் பதவியில் மற்றும்/அல்லது சிரேஷ்ட உதவி கணக்காளர் / சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் அல்லது சிரேஷ்ட உதவி நிதியாளர் பதவிகளில் பணியாற்றியிருக்க வேண்டும்.

**அல்லது**

6. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் / உயர் கல்வி நிறுவனமொன்றில் / நிறுவனத்தில் பிரதி கணக்காளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதியாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்.

- அக்குறித்த பதவியில் நிரந்தரம் செய்யப்பட்டிருத்தல்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து பெற்ற முதல் பட்டம்

**அல்லது**

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (CASL) வழங்கும் இடைநிலை தகுதி அல்லது அதற்கு இணையான தகுதி பெற்றிருத்தல்;

**அல்லது**

- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE) அல்லது அதன் முன்னோடி நிறுவனம் வழங்கும் கணக்கியல் தொடர்பான உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDA)
- பல்கலைக்கழக முறைமையில் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு தொடர்பாக பதினெட்டு (18) ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.
- மேற்கூறிய அனுபவத்தில், குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பல்கலைக்கழக முறைமையில் பிரதி கணக்காளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதியாளர் பதவியில் இருந்ததாக இருக்க வேண்டும்

**அல்லது**

7. பின்வரும் தகுதிகளுடன், இலங்கை கணக்காளர் சேவையில் கணக்காளர் II ஆம் தரத்தில் பதவி வகித்தல்.

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CASL) அல்லது அதற்கு இணையான நிறுவனத்தின் அங்கத்துவத்தை பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனத்தில் கணக்கியல்/நிதி/முகாமைத்துவம் போன்ற பாடங்களில் பட்டப்பின் பட்டம் பெற்றிருக்க வேண்டும்

குறிப்பு: **'கணக்கியல் மற்றும் / அல்லது கணக்காய்வு'** அனுபவம் என்பது அரசு அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு தொடர்பில் பெற்றுக்கொண்ட நிறைவேற்ற மட்ட அனுபவத்தைக் குறிக்கிறது

'முகாமைத்துவம்' என்ற *சொல், கணக்கியல் மற்றும் நிதித்துறை ஆகிய முக்கிய கூறுகளுடன் கூடிய முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / வணிக நிர்வாகம் தொடர்பான பட்டத்தை குறிக்கிறது.

**சம்பள அளவுத்திட்டம் :**

**U–EX 3 (II) – மாதாந்தம் ரூபா. 166,130-7x3,900;11x4,850 -246,780**

(இதற்கு மேலாக, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் toq;fg;gLk;.)

**தேர்ந்தெடுக்கும் அளவுகோல்கள்:**

**அ)** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்.

ஆ) நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெறும் விண்ணப்பதாரர்கள், தேர்வு செய்யப்படுவதற்காக கவனத்தில் கொள்ளத் தகுதியுடையவர்கள் ஆவர்."

## 3. உள்ளகக் கணக்காய்வாளர் பதவி

**தகைமைகள்:**

1.(அ.) இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் (CASL) அங்கத்துவம் அல்லது அதற்கு இணையான தகைமைகள் பெற்றிருக்க வேண்டும்.

**மற்றும்**

(ஆ) மேலே உள்ள 1(அ) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்ற பின்னர், கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு தொடர்பாக குறைந்தது ஆறு (06) ஆண்டுகள் நிறைவேற்று மட்டத்திலான அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**அல்லது**

2. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் / நிறுவனத்தில் பிரதி கணக்காளர் / பிரதி நிதியாளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்.

- அக்குறித்த பதவியில் மூன்று (03) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலத்துடன் நிரந்தரம் செய்யப்பட்டிருக்க வேண்டும்; மேலும், அந்த சேவைக்காலத்தில் குறைந்தது ஒரு (01) ஆண்டு, மேலே 1(அ) இல் குறிப்பிடப்பட்ட தகுதிகளைப் பெற்ற பின்னர் ஏற்பட்டதாக இருக்க வேண்டும்.

**அல்லது**

3. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனத்தில் / நிறுவனத்தில் சிரேஷ்ட உதவி கணக்காளர், சிரேஷ்ட உதவி நிதியாளர் / அல்லது சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பதவி வகிப்பவராக இருத்தல்

- கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு தொடர்பான பத்து (10) ஆண்டுகள் நிறைவேற்றுநர் மட்டத்திலான அனுபவத்துடன், அந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- மேற்குறிப்பட்ட பத்து (10) ஆண்டுகளில், குறைந்தது எட்டு (08) ஆண்டுகள் திருப்திகரமான சேவைக்காலம், பல்கலைக்கழக அமைப்பில் சிரேஷ்ட உதவி கணக்காளர் / சிரேஷ்ட உதவி நிதியாளர் / சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பதவி வகித்தல்.
- மேற்குறிப்பிட்ட எட்டு (08) ஆண்டுகளின் அனுபவத்தில், குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் மேலே 1(அ) இல் குறிப்பிடப்பட்ட தகுதியைப் பெற்ற பின்னர் கிடைத்ததாக இருக்க வேண்டும்.

**அல்லது**

4. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றில் / நிறுவனத்தில் பிரதி கணக்காளர் / பிரதி நிதியாளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்.

- அந்தப் பதவியில் நிரந்தரம் செய்யப்பட்டிருத்தல்;
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (CASL) வழங்கும் இடைநிலை தகுதி அல்லது அதற்கு இணையான தகுதி பெற்றிருத்தல்;
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து கணக்கியல் /நிதி /முகாமைத்துவம்*தொடர்பில் பட்டப்பின் பட்டம் பெற்றிருத்தல்.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (CASL) வழங்கும் இடைநிலைத் தகுதி அல்லது அதனுடன் இணையான தகுதியை வெற்றிகரமாக முடித்ததைத் தொடர்ந்து, கணக்கியல் மற்றும் /அல்லது கணக்காய்வு தொடர்பாக பன்னிரண்டு (12) ஆண்டுகள் நிறைவேற்றுநர் மட்டத்தில் அனுபவம் பெற்றிருத்தல்.
- மேலே குறிப்பிடப்பட்ட அனுபவத்தில் பத்து (10) ஆண்டுகள் பல்கலைக்கழக அமைப்பில் சிரேஷ்ட உதவி கணக்காளர் / சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் அல்லது சிரேஷ்ட உதவி நிதியாளர் பதவியில் பணியாற்றியிருக்க வேண்டும்.

அல்லது

5. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் / உயர் கல்வி நிறுவனத்தில் / நிறுவனத்தில் பிரதி கணக்காளர்/ பிரதி உள்ளக கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதியாளர் பதவி வகிப்பவராக இருத்தல்..

- அந்த பதவியில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டு, அதில் மூன்று (03) ஆண்டுகளுக்கான திருப்திகரமான சேவைக்காலத்தை பெற்றிருத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து முதல் பட்டத்தை பெற்றிருத்தல்;
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (CASL) வழங்கும் இடைநிலைத் தகுதி அல்லது அதற்கு சமமான தகுதி பெற்றிருத்தல்.

அல்லது

- இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகம் (SLIATE) அல்லது அதன் முன்னோடி நிறுவனம் வழங்கும் கணக்கியல் தொடர்பான உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDA) பெற்றிருத்தல்.

- மேலே குறிப்பிடப்பட்ட இடைநிலை தகுதி / கணக்கியல் தொடர்பாக உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDA) பெற்றுக் கொண்டதன் பின்னர், கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு பற்றிய நிறைவேற்றுநர் மட்டத்திலான பதினான்கு (14) ஆண்டுகள் அனுபவம்;

- மேற்கூறிய அனுபவத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள், U-EX 2(I) சம்பளக் குறியீட்டிற்குட்பட்ட சம்பள அளவுத்திட்டம் கொண்ட பல்கலைக்கழக முறைமையில் பிரதி கணக்காளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதியாளர் பதவியில் மற்றும்/அல்லது சிரேஷ்ட உதவி கணக்காளர் / சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் அல்லது சிரேஷ்ட உதவி நிதியாளர் பதவிகளில் பணியாற்றியிருக்க வேண்டும்**.**

**அல்லது**

6. பின்வரும் தகுதிகளுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் / உயர் கல்வி நிறுவனமொன்றில் / நிறுவனத்தில் பிரதி கணக்காளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதியாளர் பதவியை வகிப்பவராக இருத்தல்.

- அக்குறித்த பதவியில் நிரந்தரம் செய்யப்பட்டிருத்தல்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் / உயர்கல்வி நிறுவனத்திலிருந்து பெற்ற முதல் பட்டம்

**அல்லது**

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் (CASL) வழங்கும் இடைநிலை தகுதி அல்லது அதற்கு இணையான தகுதி பெற்றிருத்தல்;

**அல்லது**

- இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் (SLIATE) அல்லது அதன் முன்னோடி நிறுவனம் வழங்கும் கணக்கியல் தொடர்பான உயர் தொழில்நுட்ப டிப்ளோமா (HNDA)
- பல்கலைக்கழக முறைமையில் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு தொடர்பாக பதினெட்டு (18) ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

- மேற்கூறிய அனுபவத்தில், குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் பல்கலைக்கழக முறைமையில் பிரதி கணக்காளர் / பிரதி உள்ளக கணக்காய்வாளர் அல்லது பிரதி நிதியாளர் பதவியில் இருந்ததாக இருக்க வேண்டும்

**அல்லது**

7. பின்வரும் தகுதிகளுடன், இலங்கை கணக்காளர் சேவையில் கணக்காளர் II ஆம் தரத்தில் பதவி வகித்தல்.

- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் (CASL) அல்லது அதற்கு இணையான நிறுவனத்தின் அங்கத்துவத்தை பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/உயர்கல்வி நிறுவனத்தில் கணக்கியல்/நிதி/முகாமைத்துவம் போன்ற பாடங்களில் பட்டப்பின் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு: **'கணக்கியல் மற்றும் / அல்லது கணக்காய்வு'** அனுபவம் என்பது அரசு அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் கணக்கியல் மற்றும்/அல்லது கணக்காய்வு தொடர்பில் பெற்றுக்கொண்ட நிறைவேற்ற மட்ட அனுபவத்தைக் குறிக்கிறது

'முகாமைத்துவம்' என்ற *சொல், கணக்கியல் மற்றும் நிதித்துறை ஆகிய முக்கிய கூறுகளுடன் கூடிய முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / வணிக நிர்வாகம் தொடர்பான பட்டத்தை குறிக்கிறது.

**சம்பள அளவுத்திட்டம் :**

**U–EX 3 (II) – மாதாந்தம் ரூபா. 166,130-7x3,900;11x4,850 -246,780**

(இதற்கு மேலாக, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் toq;fg;gLk;.)

**தேர்ந்தெடுக்கும் அளவுகோல்கள்:**

**அ)** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும்.

ஆ) நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்கள் பெறும் விண்ணப்பதாரர்கள், தேர்வு செய்யப்படுவதற்காக கவனத்தில் கொள்ளத் தகுதியுடையவர்கள் ஆவர்."

---

**<u>மூன்று பதவிகளுக்கும் பொருந்தக்கூடிய பொதுவான நிபந்தனைகள்</u>**

**பிற சலுகைகள்:**

(i). **ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு சம்பள திட்டம்**

ஊழியர் மற்றும் தொழில்தருநர் முறையே சம்பளத்தில் 10% மற்றும் 7% ஐ பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டும். மேலும், தொழில்தருநர் சம்பளத்தில் 8% ஐ ஓய்வூதிய சம்பள நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

- நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து கட்டாய ஓய்வு பெறும் வயது (கல்விசாரா - 60 வயது) வரை பல்கலைக்கழக அமைப்பில் இருபது ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் பணியாற்ற முடியாத ஊழியர்களின், பல்கலைக்கழக ஓய்வூதிய சம்பள நிதிக்கு பங்களிப்பு செய்யப்படாது. மேலும், அத்தகைய ஊழியர்கள் பல்கலைக்கழக ஓய்வூதிய சம்பள நிதியில் அங்கத்தவராக இருக்க மாட்டார்கள்.

(ii) **ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி**

தொழில்தருநர், சம்பளத்தில் 03% ஆகிய நிதி வரவு வைப்பார்

(iii) **பணிக்கொடை**

1983 ஆம் ஆண்டு 12ஆம் இலக்கம் கொண்ட பணிக்கொடை-கொடுப்பனவு சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பணிக்கொடைகள் வழங்கப்படும்

* மேலே $wg;gl;l பதவிfis வகிப்பவர்கள், சம்பந்தப்பட்ட அரசாங்க ஒழுங்குவிதிகளுக்கமைய, உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் கிடைப்பதற்கு அல்லது போக்குவரத்துக்கு பதிலாக கொடுப்பனவு பெற தகுதியுடையவர்கள்

* மேலே $wg;gl;l பதவிகளை வகிப்பவர்கள், தொடர்புடைய ஏற்பாடுகளுக்கமைய நிர்ணயிக்கப்பட்ட சேவைக் காலத்தை முடித்த பின்னர், முழு சம்பளத்துடன் கூடிய ஏழாண்டு லீவு பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்."

**ஏனைய நிபந்தனைகள்:**

i. **விண்ணப்ப செயலாக்க கட்டணம்:**

மேலதிக செயலாளர், கணக்காளர் அல்லது உள்ளக கணக்காய்வாளர் ஆகிய ஒவ்வொரு பதவிகளுக்காக ரூபா. 1,000/- மீளளிப்பு செய்யப்படாத விண்ணப்ப செயலாக்க கட்டணம் செலுத்தப்பட வேண்டும். இந்தக் கொடுப்பனவுகள் இலங்கை வங்கியின், டொரிங்டன் கிளைக்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கணக்கு இலக்கம் 0002323287 இல் செலுத்தப்பட வேண்டும். வங்கி வைப்புச் சீட்டின் வாடிக்கையாளரின் பிரதியில், உங்கள் பெயர், வங்கி விவரங்கள் மற்றும் விண்ணப்பிக்கப்படும் "பதவியின் பெயர்" குறிப்பிடலாக குறிப்பிடப்பட வேண்டும்."

விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள உரிய கூட்டில் வங்கி வைப்புச் சீட்டு ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பதாரரின் விவரங்கள் இல்லாத வங்கி வைப்புச் சீட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படாது என்பதை தயவுசெய்து கருத்திற் கொள்ளவும்.

ii மேலே பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், இதை ப.மா.ஆ வலைத்தளமான www.ugc.ac.lk இல் உள்ள "தொழில் வாய்ப்புகள்" ("Career Opportunities") இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

iii. முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், தொடர்புடைய அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளுடன், **2025 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள்**, சிரேஷ்ட உதவிச் செயலாளர் / பணிநிலைப்பிரிவு , பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலக்கம் 20, வோர்டு பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடிய வகையில் **பதிவுத் தபாலில்** அனுப்பப்பட வேண்டும். **பரிந்துரைக்கப்பட்ட படிவங்களில்** அனுப்பப்படும் **விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.** ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து, ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பச் செயலாக்கக் கட்டணத்தைச் செலுத்தியிருக்க வேண்டும்.

iv விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிட வேண்டும்.

v. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள்/நிறுவனங்களில், அரசுத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள், தங்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரின் மூலம் சமர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

vi. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள்/நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் படி வயதெல்லை பரிசீலிக்கப்படும். மேலும், சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் அறிவித்தல் வாசகங்களில் ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட விளம்பரமே மேலோங்கும்.

vii. இறுதித் தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள், மேலேயுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் அல்லது முழுமையற்ற விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும்.

viii. விண்ணப்பதாரர்களை குறுக்குப் பட்டியலிடும் உரிமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் உள்ளது.

செயலாளர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இலக்கம். 20,  வார்டு பிளேஸ்
கொழும்பு – 07

**2025. <u>டிசெம்பர்</u> 14,**